# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் **2020** மே மாதம் 29 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை **4.30** மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை:- திரு. A. வெங்கடாசலம், B.E.,**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**

**கூட்ட பொருள்கள்**

**பொருள் எண்-1**

இந்நகர்மன்ற தீர்மான எண்.214 நாள்:- 28.02.2020ல் கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு நோய் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணிகளுக்கு, 47 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு ராசி மகளிர் சுயஉதவிக்குழுவின் மூலம் தேர்ந்தெடுத்து மே 2020 வரை அனுமதி பெறப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், தற்போது தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் வெகுவாக பரவி வருவதாலும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களின் அறிவுரையில் டெங்கு நோய் தடுப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் கொசுப்புழு பணியாளர்களை பணி நீட்டிப்பு செய்து கொரோனா வைரஸ் குறித்த விழிப்புணர்வு பொது மக்களிடம் ஏற்படுத்தவும், டெங்கு மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் ஏற்கனவே பணிபுரியும் ராசி மகளிர் சுயஉதவி குழு மூலமாகவே தொடர்ந்து 47 பணியாளர்களை ஜீன் 2020 முதல் ஆகஸ்ட் 2020 ஆகிய 3 மாதங்களுக்கு பணியில் அமர்த்திகொள்ளவும், இவர்களுக்கு கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொகை நாளொன்றுக்கு ரூ.289/- வீதம் ஊதியம் வழங்கிடவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.13.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பணிபுரியும் ராசி மகளிர் சுயஉதவிகுழு மூலமாகவே ஜீன் 2020 முதல் ஆகஸ்ட் 2020 ஆகிய 3 மாதங்களுக்கு பணிபுரியவும் மன்றம் அனுமதிக்கலாம்
3. மாவட்ட ஆட்சி தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொகையான நாளொன்றுக்கு ரூ.289/- ஊதியமாக வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1490 /2019/எச்1)**

**பொருள் எண்-2**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார வாகனம் எண்.TN32U8542ன் தகுதி சான்று 28.05.2020ம் தேதியன்று முடிவுறுவதால், வாகனத்திலுள்ள பழுதுகளை நீக்கம் செய்ய வேண்டியுள்ளதாலும், மேற்படி வாகனத்தினை பழுது நீக்கம் செய்ய விழுப்புரம் TVS நிறுவனத்திடம் கொண்டு சென்று மேற்படி வாகனத்துலுள்ள பழுதுகளை நீக்கம் செய்து கொள்ளவும், பழுதுகளை நீக்கம் செய்து பெறப்படும் பட்டியல் தொகையினை வழங்கவும், பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் தகுதிசான்று பெறுவதற்கும் பெறப்படும் பட்டியல் தொகையினை வழங்கவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி TVS விழுப்புரம் என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.எச்1/1144/2020)**

**பொருள் எண்-3**

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் நோய் வெகுவாக பரவிவருவதால் கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தொற்று ஏற்பட்டுள்ளதால் இப்பகுதியில் இந்நோய் தொற்று மேலும் பரவாமல் தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி , தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் 1920 சட்டத்தின் பிரிவு 15 ன் படி மே 2020 ஆம் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு கீழ்க்கண்ட நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் படி தொகை ரூ.**2245375**/-யை செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

விபரம்

| வ.எண் | கோப்பு எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 733/7/2020/H1 | திருப்பத்தூர் அக்ரோ என்ஜீனியரிங் சர்வீஸ் கோ-ஆப் சென்டர் லிமிடெட், திருப்பத்தூர் | 915680.00 |
| 2 | 733/8/2020/H1 | M/s விஜய் ஸ்ரீசர்ஜிகல், சேலம் | 9000.00 |
| 3 | 733/12/2020/H1 | M/s கோகுல் அக்ரிடெக், திருவண்ணாமலை | 62000.00 |
| 4 | 733/9/2020/H1 | M/s சரவணா & கோ, கோயம்புத்தூர் | 31255.00 |
| 5 | 733/10/2020/H1 | M/s நேதாஜி பார்மஸி, திண்டுக்கல் | 283500.00 |
| 6 | 733/16/2020/H1 | M/s.வெண்பா சர்ஜிக்கல்ஸ், கள்ளக்குறிச்சி | 245250.00 |
| 7 | 733/14/2020/H1 | திருமதி.எஸ்.புவனேஸ்வரி, நெல்லிக்குப்பம் | 220600.00 |
| 8 | 733/17/2020/H1 | திரு.எம்.சரவணன், கள்ளக்குறிச்சி | 18000.00 |
| 9 | 739/2020/H1 | திரு.P.செல்வகுமார்,கள்ளக்குறிச்சி | 8150.00 |
| 10 | 733/15/2020/H1 | திருப்பத்தூர் அக்ரோ என்ஜீனியரிங் சர்வீஸ் கோ-ஆப் சென்டர் லிமிடெட், திருப்பத்தூர் | 451940.00 |
| | | மொத்தம் | 2245375.00 |

**அலுவலக குறிப்பு:-**

1.பதிவு செய்யலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவரின் முன்னனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனங்களுக்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

3.மேற்படி பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 733/7 / 2020 /எச்1)**

**பொருள் எண்-4**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஏமப்பேர் கிராம புல எண். 258/5pt, 258/8A, 265/1A1, 265/1A2A, 265/1A3A அமைந்துள்ள அனுமதியற்ற ஸ்ரீநாத் கார்டன் மனைப்பிரிவில் உள்ள 39 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண்.78 மற்றும் 172ன் படி ந.க.எண்.1538/2019/விம நாள். 04.10.2019ல் கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ(வி.ம) எண். R790/2019 என எண்ணிடப்பட்ட மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடம் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு வரன்முறைபடுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்திய பின் மனைகளை வரன்முறைபடுத்தி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1061/ 2020/எப்1)**

**பொருள் எண்-5**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குச் சொந்தமான தினசரி நாளங்காடியில் உள்ள ஆண்டு குத்தகையினமான கட்டண கழிவறையினை 01.04.2019 முதல் துறை ரீதியாக வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கட்டண கழிவறையில் உள்ள ஆழ்துளை கிணற்று மின் மோட்டார் அடிக்கடி பழுது ஏற்படுவதால் அதனை புதியதாக மாற்றி அமைத்து கூடுதலாக பைப்கள் இறக்கிடவும், மேற்படி பணிகளை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, விதி-15ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, செலவீனம் ரூ. 1,26,694/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தி ஆறாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று நான்கு மட்டும்)–ஐ நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து M/s. ரீத்திகா டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தாருக்கு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.

**( ந.க.எண். 3111 / 2019 / அ1 )**

**பொருள் எண்-6**

இந்தியா முழுவதும் கொரோனா தொற்றுநோய் காரணமாக 144 தடை உத்தரவு பிறக்கப்பட்டு உள்ளதை தொடர்ந்து இந்நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் செய்ய இயலாத சூழ்நிலையில் பணியின் அவசர, அவசியம் கருதி கீழ்க்கண்ட பணிகள் நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15இன் கீழ் மேற்கொள்ளப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.2,32,530/—(ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பத்தியிரண்டாயிரத்து ஐநூற்று முப்பது மட்டும்) நகராட்சி வருவாய் மற்றும் குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திரு) | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | கொரோனா நோய் பரவலை தடுக்க கிருமி நாசினி இயந்திரம் ஏற்றி வந்து நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் மேற்கொண்டது | பி.நடராஜன், கள்ளக்குறிச்சி | 70140 |
| 2 | கொரோனா நோய் தொற்று பரவலை தடுக்க கொரோனா உறுதி செய்யப்பட்ட பகுதிகளில் தடுப்பு கட்டைகள் அமைத்து பொது மக்கள் போக்குவரத்தினை தடுக்கும் பொருட்டு கிரில் கேட் அமைத்தது | பி.நடராஜன், கள்ளக்குறிச்சி | 95050 |
| 3 | அலுவலகத்தில் இ—சேவை மையம், ஆதார் மையத்திற்கான தனி தனி அலுமினிய தடுப்புகள் அமைத்தது | எம்.மோகன், கள்ளக்குறிச்சி | 67340 |
| | | மொத்தம் | 232530 |

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான செலவினத்தினை நகராட்சி வருவாய் மற்றும் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1128,1129,11219 / 2020 /இ1)

பொருள் எண் – 7

கள்ளக்குறிச்சி நகராட்சியில் குடிநீர் நிதி / வருவாய் நிதியின் கீழ், பணிகளின் அவசர, அவசியம் கருதி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, விதி-15ன் கீழ், கீழ்க்காணும் விவரப்படி உள்ள பணிகளை மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. அதற்காக வழங்கப்பட்ட செலவீன பட்டியல் தொகைகளை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | பட்டியல் தொகை | பட்டியல் வழங்கப்பட்ட நாள் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1. | குடிநீர் விநியோக உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 9,42,256/- | 22.03.2019 | M/s. ரீத்திகா டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி |
| 2. | தெருமின் விளக்கு உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 4,84,837/- | 22.07.2019 | M/s. ஆர்.வி. & கோ., கள்ளக்குறிச்சி |
| 3. | வார்டு எண். 12 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் உள்ள சிறுமின் விசைப்பம்புகள் பழுது நீக்கம் செய்தல் | ரூ. 4,92,240/- | 09.08.2019 | திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | வார்டு எண். 16, சுமங்கலி நகரில் குழாய்கள் மூலம் மழைநீர் வெளியேற்றுதல் | ரூ. 1,71,750/- | 01.10.2019 | M/s. ரீத்திகா டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி |
| 5. | நகராட்சி அலுவலக வளாகத்தில் மறு சுழற்சிக்குட்பட்ட பொருட்கள் சேகரிப்பு கூடம் (RRC) கட்டுதல் | ரூ. 2,89,152/- | 21.10.2019 | திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி |
| 6. | வார்டு எண். 15, எமப்பேர் ஜெ.ஜெ. நகரில் மின் மோட்டார் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 1,32,608/- | 13.01.2020 | M/s. ரீத்திகா டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**( ந.க.எண். 2812 / 2019 / இ1 )**

<u>பொருள் எண்- 8</u>

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2020-2021-ன் கீழ், சாலைப்பணிகள் மேற்கொள்வதற்கான கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு, கீழ்க்காணும் சாலைப்பணிகள் சிப்பங்கள் வாரியாக மொத்தம் ரூ. 280.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | சிப்பம் எண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ.) | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | I | மிளகாய் தோட்டம் சாலை குறுக்குத் தெரு தார்சாலை அமைத்தல் (வார்டு எண். 01) | 0.275 | 146.00 |
| 2. | | எம்.ஜி.ஆர். நகர் பிரதான சாாலை தார்சாலை அமைத்தல் (வார்டு எண். 02) | 0.350 | |
| 3. | | சுந்தர விநாயகர் கோவில் தெரு தார்சாலை அமைத்தல் (வார்டு எண். 10) | 0.335 | |
| 4. | | தம்பி லேத் ஓர்க்ஸ் சாலை விஸ்தரிப்பு தார்சாலை அமைத்தல் (வார்டு எண். 10) | 0.200 | |
| 5. | | விளாந்தாங்கல் சாலை அழகர் நகர் சாலை தார்சாலை அமைத்தல் (வார்டு எண். 21) | 0.230 | |
| 6. | | விநாயகா நகர் பிரதான சாலை விஸ்தரிப்பு தார்சாலை அமைத்தல் (வார்டு எண். 10) | 0.500 | |
| 7. | II | இந்திரா நகர் முதல் ஜெ.ஜெ. நகர் வரை தார்சாலை அமைத்தல் (வார்டு எண். 01, 15) | 0.500 | 134.00 |
| 8. | | கச்சிராயபாளையம் சாலை முதல் ஜெ.ஜெ. நகர் சாலை தார்சாலை அமைத்தல் (வார்டு எண். 21, 15) | 0.900 | |
| 9. | | ராமச்சந்திரா நகர் பிரதான சாலை தார்சாலை அமைத்தல் (வார்டு எண். 13) | 0.425 | |
| 10. | | கே.ஏ.ஜி. நகர் சாலை (மவுண்ட் கார்மல் பள்ளி அருகில்) தார்சாலை அமைத்தல் (வார்டு எண். 15) | 0.180 | |
| | | **மொத்தம்** | **3.895** | **280.00** |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2020-2021ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகையினை முழு மான்யமாக வழங்கிட கோரியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 1314 / 2020 / இ1 )**

**<u>பொருள் எண்-9</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதிகளில் தற்போது வடகிழக்கு பருவ மழை பொய்த்திவிட்ட காரணத்தினால், இந்நகரப் பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறுகளில் உள்ள நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. மேலும் இந்நகருக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் குடிநீரின் அளவும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. எனவே, பொதுமக்களின் குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டும், தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக பொதுமக்கள் சாலைமறியல் போன்ற முயற்சிகளில் இறங்காமல் கண்காணிக்கவும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களால் காணொலி காட்சி மூலம் நடத்தப்பட்ட வாராந்திர ஆய்வு கூட்டங்களிலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இந்நகரப் பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வரப்பெறாத நாட்களில், தனியார் வாடகை டிராக்டர்கள் மூலம் குடிநீர் வழங்குவதை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள உயர் அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, கீழ்க்காணும் விவரப்படி உள்ள பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 07 வரையுள்ள பகுதிகளில் டேங்கர் லாரிகள் / டிராக்டர்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | ரூ. 5,00,000/- |
| 2. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 08 முதல் 14 வரையுள்ள பகுதிகளில் டேங்கர் லாரிகள் / டிராக்டர்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | ரூ. 5,00,000/- |
| 3. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 15 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் டேங்கர் லாரிகள் / டிராக்டர்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | ரூ. 5,00,000/- |

மேற்காணும் விவரப்படி உள்ள பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கும், 2020-2021 ஆம் ஆண்டிற்கு வருடாந்திர ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிகளை 2020-2021 ஆம் ஆண்டிற்கு வருடாந்திர ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1311 / 2020 / இ1)**

**<u>பொருள் எண்-10</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் இந்நகராட்சியின் மூலம் 26 சமுதாய கழிவறைகள், 2 கட்டண கழிவறைகள் மற்றும் 1 பொதுகழிவறை பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி 26 சமுதாய கழிவறைகளில் கழிவறைகளுக்கு தேவையான தண்ணீர் அருகில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து தற்போது எடுக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி அந்த ஆழ்துளை கிணற்றிலிருந்து பொதுமக்களுக்கு சிறிய குடிநீர் தொட்டி மூலமாகவும், விநியோக குழாய்கள் மூலமாகவும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது வறட்சி காலம் என்பதால், நிலத்தடி நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே செல்வதால், பொதுமக்களுக்கு சரியான முறையில் குடிநீர் வழங்க இயலாத நிலையில், சமுதாய கழிவறைகளுக்கும் தண்ணீர் ஏற்ற இயலாத நிலையில் உள்ளது. எனவே, வார்டு எண். 08, 13 மற்றும் 19 ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள சமுதாய கழிவறைகளுக்கு மட்டும், தனியே புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1. | சிறுவங்கூர் சாலை சமுதாய கழிவறைக்கு ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதிகள் ஏற்படுத்துதல் (வார்டு எண். 08) | ரூ. 2,25,000/- |
| 2. | ஏமப்பேர் காலனி சமுதாய கழிவறைக்கு ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதிகள் ஏற்படுத்துதல் (வார்டு எண். 13) | ரூ. 2,50,000/- |
| 3. | மந்தைவெளி சமுதாய கழிவறைக்கு ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதிகள் ஏற்படுத்துதல் (வார்டு எண். 19) | ரூ. 3,00,000/- |

மேற்காணும் விவரப்படி உள்ள பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியம் கருதி உடனடியாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 1312 / 2020 / இ1 )**

<u>பொருள் எண்-11</u>

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தில் ஏற்கனவே அப்போதைய திருமண மண்டபமாக செயல்பட்ட காலத்தில் அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணறானது, அமைக்கப்பட்டு 15 வருடங்களுக்கும் மேல் ஆகிறது. தற்போது கோடை காலங்களில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்தும், தண்ணீர் சரியான முறையில் அலுவலக தேவைக்கு கிடைக்கப்படுவதில்லை. மேலும், இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மேற்படி இந்நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களும், ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வரும் நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் நகராட்சி அலுவலக கழிவறையினை பயன்படுத்தி வருகிறார்கள். இந்நகராட்சியில் கழிவறையினை பயன்படுத்த போதுமான தண்ணீர் வசதிகள் இல்லாமல் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

எனவே, இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசிமாவதால், மேற்படி பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர, அவசியம் கருதி உடனடியாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 1313 / 2020 / இ1 )**

<u>பொருள் எண்-12</u>

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான துருகம் சாலை மயானத்தில் அமைந்துள்ள நுன்உரக்கள மையம் அலகு-1 & 2 (MCC Unit-I & II)-ல் இயற்கை உரம் தயார் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி நுன்உரக்கள மையத்திற்கு அருகில் கழிவறை, வளமீட்பு மையம் அமைந்துள்ளது. மேலும், நுன்உரக்கள மையத்திற்கு தண்ணீர் வசதிகள் இல்லாமல் உள்ளது. மேலும் அருகில் உள்ள கழிவறை மற்றும் வளமீட்பு மையம் ஆகியவற்றிற்கும் தண்ணீர் வசதியில்லாமல் உள்ளது.

எனவே, துருகம் சாலை மயானத்தில் அமைந்துள்ள நுன்உரக்கள மையம் (அலகு-1 & 2)-க்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசிமாவதால், மேற்படி பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 2,50,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர, அவசியம் கருதி உடனடியாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 1315 / 2020 / இ1 )**

பொருள் எண்-13

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான துருகம் சாலை மயானத்தில் அமைந்துள்ள மயானத்தில், நவீன எரிவாயு தகன மேடை, நுன்உரக்கள மையம் அலகு-1 & 2, வளமீட்பு மையம் ஆகியவைகள் அமைந்துள்ளன. மேற்படி மயானத்தின் நெடுஞ்சாலை பகுதியில் (தெற்குபுறம்) அமைந்துள்ள சுற்று சுவரானது மிகவும் பழுதடைந்து எந்நேரத்திலும் இடிந்து விழும் நிலையில் உள்ளது. மேற்படி சுற்று சுவரானது கட்டப்பட்டு 15 ஆண்டுகளுக்கும் மேல் ஆகிறது. மேலும் நெடுஞ்சாலையினைவிட மயானம் மிகவும் தாழ்வாக உள்ளதால், மேற்படி சுற்று சுவர் பழுதடைந்துள்ளது. எனவே, பழுடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ள சுற்று சுவரினை அகற்றிவிட்டு, புதியதாக சுற்று சுவர் அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, துருகம் சாலை மயானத்தில் சாலை பகுதியில் (தெற்குபுறம்) புதியதாக சுற்று சுவர் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,95,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர, அவசியம் கருதி உடனடியாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 1316 / 2020 / இ1 )**

பொருள் எண்-14

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2019-2020ன் கீழ், ரூ. 500.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பணிகள் அமைப்பதற்கு, நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் சாலைகளில் வார்டு எண். 01, 10, 15 ஆகிய வார்டு பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய்கள் இல்லாமல் உள்ளது. மேலும் தார்சாலை அமைக்கும் பணிகள் தொடங்கப்படவுள்ள நிலையில், சாலைகளை அமைக்கப்பட்ட பின்னர் குடிநீர் குழாய்களை அமைப்பதில் ஏற்படும் சிரமங்களை தவிர்த்திடும் வகையில், அப்பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய்கள் அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, வார்டு எண். 01, 10, 15 ஆகிய வார்டு பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள சாலைகளில் புதியதாக குடிநீர் விநியோக குழாய்கள் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,95,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர, அவசியம் கருதி உடனடியாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் / குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 1317 / 2020 / இ1 )**

பொருள் எண்-15

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்கள் அனைவரும் பார்வைக்கு தெரியும் வகையில் அடையாள அட்டை அணிய வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 32222/2018/ஒபி2 நாள் 09.03.2020இல் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் பணி நேரத்தில் அடையாள அட்டை அணிய வேண்டும் என உயர் அலுவலர் அறிவுறுத்தியுள்ளதற்கிணங்க, கள்ளக்குறிச்சி நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் பார்வைக்கு தெரியும் வகையில் அடையாள அட்டை அணிய ஏதுவாக நகர்மன்ற தீர்மான எண் 247/2020 நாள் 30.03.2020இன் வழியே தொகை ரூ.60000–(ரூபாய் அறுபதாயிரம்

மட்டும்) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 12.05.2020 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திரு) | அடையாள அட்டை ஒன்றுக்கான தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களை போட்டோ எடுத்து அடையாள அட்டை கயிறுடன் (ID Rope) வழங்க லேமினேஷன் அமைப்பிலான அடையாள அட்டை தயார் செய்தல் | ஸ்ரீ அம்மன் பிரிண்டர்ஸ் கள்ளக்குறிச்சி | 170 |
| 2 | | அனிதா பிரிண்டர்ஸ், கள்ளக்குறிச்சி | 150 |
| 3 | | ஸ்ரீவேல்முருகா பிரிண்டர்ஸ், சங்கராபுரம் | 130 |

அலுவலகக் குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீவேல்முருகா பிரிண்டர்ஸ், சங்கராபுரம் என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
3. அடையாள அட்டை தயார் செய்ய ஆகும் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 878/2020/சி1)

## பொருள் எண் – 16

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 15 ஜெ ஜெ ஜகர் பகுதியில் மின் மோட்டார் பழுதுடைந்துள்ளதை புதியதாக மாற்றி உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியத்தினை கருதி, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15இன்கீழ் பணிகள் மேற்கொண்டமைக்கு ஒப்பந்ததாரர் ரீத்திகா டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்திற்கு தொகை ரூ.132608/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தியிரண்டாயிரத்து அறுநூற்று எட்டு மட்டும்) வழங்கியதையும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கொள்ளப்பட்ட செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண் இ1/5334/2019)

தனி அலுவலர் (ம)
ஆணையாளர்(பொ),
கள்ளக்குறிச்சி நகராட்சி